RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s222612

# இனவரைவியல் நோக்கில் புறநானூறு

அ. கிரேஸி ஜெனோவா [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூயவளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), மஞ்சக்குப்பம், கடலூர்-1, தமிழ்நாடு, இந்தியா

# Ethnography from Purananuru's perspective

A. Gracy Janova [a, *]

[a] Department of Tamil, St.Josephs College of Arts&Science (Autonomous), Manjakuppam. Cuddalore-1, Tamil Nadu, India

* Corresponding Author: janodomnic@gmail.com

Received: 10-09-2022
Revised: 12-11-2022
Accepted: 19-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature emphasizes not only love, war, valor and gift but also humanity. Sangam poets were intelligent, thoughtful and humane. During the Sangam era, the clans were based on the occupation of the people. Tamil society accordingly changed due to the needs and environment, and the land and occupation of the people through social development. Any learned pattern of behavior that is sustained by some recognized system can be said to be part of culture. Anthropological culture includes all the customs, traditions, institutions of people, products, and their methods of occupation. The purpose of this article is to analyze the life elements of such Tamil ethnic community with the help of Purananuru.

**Keywords:** Sangam literature, Purananuru, Tamil society, Culture

## முன்னுரை

பண்பாடு என்பது இன்றைய மானிடவியலின் அடிப்படைக் கருத்தாக்கமாகும். பண்பாடு என்பது மனிதனின் சமூக மரபு என்றும் மனிதன் உருவாக்கியுள்ள சுற்றுச்சூழல் என்றும் குறிப்பிடப்படுகின்றது. கற்றறிந்து கொள்ளப்படும் எந்தவொரு நடத்தை வடிவமும் சில அங்கீகரிக்கப்பட்ட முறைமைகளினால் நிலைநிறுத்தப் பெறுவதாயின் அவற்றைப் பண்பாட்டின் அங்கங்கள் எனலாம். மானிடவியலார் பண்பாடு என்பதனுள் அனைத்துப் பழக்கங்கள், மரபுகள், மக்களின் நிறுவனங்கள், உற்பத்திப் பொருட்கள், அவற்றின் தொழில் முறைகள் போன்ற எல்லாவற்றையும் உள்ளடக்குகின்றனர். இதனடிப்படையில் இக்கட்டுரையானது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறை இனவரைவியல் பார்வையில் மதிப்பிட உள்ளது.

## இனவரைவியல்

இனவரைவியல் என்பது களஆய்வுகளின் அடிப்படையில், மனித சமூகத் தோற்றப்பாடுகள் தொடர்பான பண்புநிலை விளக்கமாக அமையும் ஒருவகை எழுத்தாக்கம் ஆகும். பண்பாட்டு மானிடவியலின் முக்கியமான பிரிவாக இனவரைவியல் அமைந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழும் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியற் கூறுகளை, கள ஆய்வு முறைகளின் மூலம் பெறப்படும் முக்கியமானத் தரவுகளைக் கொண்டு விளக்கமாக

எழுதுவதாகும். இனவரைவியலும் இலக்கியமும் என்னும் இவ்வாய்வுக் கட்டுரையானது. இனவரைவியல் பற்றிய அறிஞர்களின் கருத்துகளையும், இனவரையியல் கூறுகளையும் ஆய்வு செய்வதுடன், இனவரையியலை இலக்கியத்துடன் ஒப்பிட்டுக் காணும் வகையில் அமைகிறது. மேலும், இலக்கிய முக்கியத்துவமும், அறிஞர்களின் புலமையும் அறிந்துகொள்ள ஏதுவாகவும் விளங்குகிறது.

இலக்கியங்களில் காணப்படும் இனவரைவியல் பதிவுகளையும், இலக்கியமும் இனைவரைவியல் ஒன்றுபடும் வேறுபடும் இடங்கள் சுட்டிக்காட்டியும் ஆய்வு செய்வதாக இவ்வாய்வுக் கட்டுரையானது அமையப்பெறுகின்றது.

## இனவரைவியல் - சொற்பொருள் விளக்கம்

மானிடவியல் கலைச் சொல்லகராதி **"Ethnography"** எனும் சொல்லுக்கு 'மனிதவினப் பரப்பு விளக்கவியல்' என்றும், பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம் 'குறிப்பிட்ட மானிடச் சமுதாயம் ஒன்றினைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி' என்றும் பல்வேறு விளக்கங்களைத் தருகின்றன.

பக்தவத்சல பாரதி 'இனக்குழுவியல்' என்னும் பொருளுடைய **"Ethnography"** என்னும் ஆங்கிலச்சொல் **"ethnos", "graphein"** ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களையும் பெற்றது. **"ethnos"** என்பதற்கு இனம், இனக்குழு, மக்கள் என்பது பொருள் என்று விளக்கம் தருகிறார்

மானிடவியலாளாின் முதன்மையான ஆர்வத்திற்குாிய எழுத்தறிவற்ற சமூகங்களின் எல்லா நிறுவனங்களும், மரபுகளும், வழக்கங்களும், நம்பிக்கைகளும், மனப்பாங்குகளும், கைவினைத் தொழில்களும் வாய்மொழியாகவே பரப்பப்பட்டு வருகின்றன" என்கிறார் பாஸ்கம்.

## புறநானூறு

புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்கள் அடங்கிய நூல் என்பது பொருள். புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு போன்ற பல பெயர்களைக் கொண்டது. இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தொாியவில்லை. இதில் 267.268 தவிர 398 பாடல்கள் உள்ளன. இந்நூல் அரசர்க்கும், புலவர்க்கும் இடையே சமூகத்தில் இருந்த நட்புறவை முன்வைக்கிறது. பாரதப்போரின் சிறப்பம்சங்களைக் கூறுகிறது. மேலும், பத்துவகை ஆடைவகை, இருபத்தி எட்டு அணிவகை, முப்பது வகைப்பட்ட படையல் வகை, அறுபத்தியேழு உணவு வகை போன்றவற்றை முன்வைக்கிறது.

## சங்க மக்களின் கருப்பொருட்கள்

### உணவு

சங்க மக்கள் உணவிற்கு முதன்மை அளித்துள்ளனர். ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளையே உட்கொண்டனர். விருந்தோம்பல் பண்பையும் சிறப்பாகப் போற்றினர். புறநானூற்றின் உணவுகளை மரக்கறி உணவு, இறைச்சி உணவு, பருகுநீர் உணவு, அரிசி, திணைமாவு, தேன், கள், வரகு, அடிசில் உணவு, கனிவகைகள் எனப் பலவாறுப் பகுத்துக் கூறியுள்ளனர் புலவர்கள். மனித இனம் உயிர் வாழ உணவு வேண்டும் என்பதனை

"உண்டி கொடுத்தோர் உயிர் கோடுத்தோரே"

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன (Swaminatha Iyer, 1956). மேலும், உணவு எனப்படுவது நிலத்தோடு நீர் சேர்ந்தது என்பதை,

"உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே"

என்று கூறுகிறது. மேலும் வரகும், திணையும் இரவலர்க்கு கொடுப்பதற்கே அன்றையத் தமிழ் சமூகம் பயிரிட்டது என்பதை,

"வரகும் திணையும் உள்ளவை எல்லாம்"

என்ற அடிகள் உணர்த்துகின்றன (Swaminatha Iyer, 1956).

மேலும் புலால் உணவை அன்றைய புறநானூற்று காலத் தமிழ்சமூகம் விரும்பி உண்டது என்பதை,

”புறவும் இதலும் அறவும் உண்கெனப்

பெய்தற்யகு எல்லின்று பொழுதே அதனான்,

முயல்சுட்ட ஆயினும் தருகுவேம்”

“ஆடவர் உடும்புஇழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச்

சீறில் முன்றில் கூறுசெய்திடுமார்”

என்ற அடிகள் உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறாக புறநானூறு உணவு குறித்த செய்திகளை முன்வைக்கிறது (Swaminatha Iyer, 1956).

## மலர்கள்

பூக்கள் தமிழர்கள் வாழ்க்கையோடு இணைந்த ஒன்று. தங்களது ஒவ்வொரு நிகழ்விலும் தமிழர்கள் பூக்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். சங்க நூல்கள் பதினெட்டிலும் பூ பற்றிய செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. புறநானூற்றில் அனிச்சம், அல்லி, ஆம்பல், இருவாட்சி, எருக்கு, எறுழ், கரந்தை, கழுநீர், காந்தள், காயா எனப் பலவகையான மலர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

மருதநில கட்டமைப்பில் மலர்கள் இருந்துள்ள பாங்கை புறநானூறு சிறப்பாக உணர்த்துகிறது. ஒன்றுடன் ஒன்று கலந்த வள்ளைக் கொடியையும், மலர்ந்த ஆம்பற் கொடியையும், குளிர்ச்சியையுடைய பகன்றைக் கொடியையும், பழமுடைய பாகல் கொடியையும், கொண்டபூம் கரும்பு அல்லது வேறு காட்டை அறியாததுமான பெரிய குளிர்ந்த மருதநிலம் என்பதை,

“மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்”

என்ற பாடலடி உணர்த்துகிறது (Swaminatha Iyer, 1956).

## மரம்

சங்ககால மக்கள் பல்வகையான மரங்களை வளர்த்து அவற்றின் மூலம் பயனடைந்த செய்தியை புறநானூறு நன்கு விளக்குகிறது. ஆசினி, ஆத்தி, ஆலம், இரத்தி, உழிஞ்சில், உன்னம், ஓடு, காஞ்சி, குறிஞ்சி, பனை, தென்னை, இலந்தை, அத்தி, வேம்பு, வேலம், வெட்சி, வேங்கை போன்ற மரவகைகள் புறநானூறு வழி நமக்கு புலப்படுகிறது. சந்தன மரத்தை சங்க மக்கள் சாந்தம், சந்து, ஆரம் என்ற பெயர்கள் கொண்டு அழைத்துள்ளனர். இதனை,

“வரைய சாந்தமும், திரைய முத்தமும்”

“சாந்த விறகின் உவித்த புன்கம்”

என்று வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன (Swaminatha Iyer, 1956).

## பறவை

சங்க இலக்கியங்களில் விலங்குகளை விடப் பறவைகளைப் பற்றிய குறிப்புகளே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. பறவைகளை வளர்ப்பதும், அதனோடு நட்புறவாடுவதும் சங்க இனக்குழு சமூகத்தினரிடையே இருந்துள்ளது என்பதை,

“குறும்பூழ் வேட்டுவன் வறுங் கையும் வருமே”

என்ற அடி உணர்த்துகிறது. கௌதாரியை சங்கச் சமூகம் பூழ், சிவல் என்று அழைப்பதோடு அதனை விளையாட்டிலும் ஈடுபடுத்தியுள்ளனர் (Velammal, 2013). இதனை,

"பொறிப்புறப் பூழின் போர்வல் சேவல்"

என்ற அடி மூலம் உய்த்துணரலாம். இவ்வாறாக புறநானூறு மூலம் உணவு, பூ, மரம், பறவை போன்றவை பண்டைய இனக்குழு மக்களிடையே எவ்வகையில் இணைந்துள்ளது என்பது இப்பகுதி மூலம் தெளிவாகிறது (Swaminatha Iyer, 1956).

## வானியல் அறிவுடைய இனக்குழு

ஞாயிறாகிய அனற்பிழம்பிலிருந்து தெறித்து விழுந்த ஒரு சிறு உருண்டையே உலகமென்றும், இந்நிலத்தினின்றும் தெறித்துச் சென்ற மற்றோர் உருண்டையே சந்திரனென்றும், ஞாயிற்றினின்றும் தெறித்து விழுந்த பூமி அதனது கவர்ச்சியில் இழுக்கப்பட்டு ஞாயிற்றைச் சுற்றி வருகிறதென்றும், அவ்வாறே பூமியிலிருந்து சிதறிய மற்றோர் உருண்டையாகிய சந்திரன் ஞாயிற்றையும் தனக்குப் பிறப்பிடமாகிய பூமியையும் ஒருங்கே சுற்றி வருகிறதென்று இக்கால ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

இவ்வுண்மையினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சங்க இனக்குழு தம் நுண்ணறிவாய் அறிந்து வெளிப்படுத்தியுள்ளதை புறநானூற்று முப்பதாம் பாடல்வழியில் உணரலாம்.

"செஞ்ஞா யிற்றுச் செலவும்

அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்

பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்

வளி திரிதரு திசையும்

வறிது நிலைஇய காயமு மென்றிவை

சென்றளந் தறிந்தோர் போல வென்றும்

இனைத்தென் போரும் உளரே" (Swaminatha Iyer, 1956)

வானத்தில் மின்னுகின்ற ஒளிப்பொருள்களை உற்றுநோக்கி அவற்றிற்கு மீன்கள் எனப் பெயரிட்டனர். இம்மீன்களை நாள்மீன், கோள்மீன் என இருவகையாகப் பகுத்துரைத்தனர்.

கூடலூர்கிழார் பாடிய புறப்பாட்டிலுள்ள வானநூற் குறியீட்டுச் சொற்கள் யாவும் தனித்தமிழ்ச் சொற்களாகவே அமைந்துள்ளதனை நோக்குங்கால், அவர்காலத்து வானநூலைப் பற்றிய தமிழ் நூல்கள் பல இயற்றப்பட்டிருந்தமையை நமக்கு உணர்த்துகிறது.

## சங்க இனக்குழுவினரின் திருமணம்

புறநானூற்று காலத்து இனச்சமூகம் இருவேறு திருமண முறைகளை பின்பற்றியுள்ளது. போர் மணம், மரபு மணம் ஒருவன் தான் மணக்க விரும்பிய பெண்ணைப் போர் நிகழ்த்தி மணம் செய்து கொள்வது போர் மணம் ஆகும். யானையை வெல்லும் வேந்தர்க்கே மணம் செய்து வைப்பார்கள் என்பதை,

"அணித்தழை நுடங்க ஓடி" (Swaminatha Iyer, 1956)

என்ற அடியும், அவளை மணக்காவிடில் விழுப்புண் பட்டு இறப்பதே சிறந்தது என்பதை,

"வேந்து குறையுறவுங் கொடாஅன் ஏந்துகோட்டு"

என்ற அடியும் உணர்த்தி நிற்கின்றன (Swaminatha Iyer, 1956).

பெற்றோர் இல்லாதபொழுது உறவினர்கள் கூடி முன்வந்து தம்பிள்ளைக்குச் செய்வதைப்போல் திருமணம் செய்து வைத்தது. அக்கால இனக்குழு மக்களின் பரந்துபட்ட மனதை நமக்கு பிரதிபலிக்கிறது. இதனை,

"பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்"

"இவர் யார்? என்குவை ஆயின் இவரே"

போன்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன (Swaminatha Iyer, 1956).

## சங்க இனக்குழுவினரின் கலை வாழ்வு

புறநானூற்றில் காணப்படும் பதிவுகளில் கலைஞர்கள் பற்றியது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இசைக்கருவிகளைப் பண், தாளத்துடன் இசைத்துப் பாடியும், ஆடல் நிகழ்த்தியும் தம்முடைய கலைத்திறனை வெளிப்படுத்திய செய்திகள் இதில் விரவிக்கிடக்கின்றன. மேலும் சங்ககால கலைஞர்கள் அனைவரும் ஒரே மரபினர் அதாவது பாணர் மரபினர் என்று புறநானூறு கூறுகிறது (Jeyaganesh, 2019).

கலைஞர்கள் இரப்பவராகவே வாழ்ந்துள்ளனர். அரசர்களோடு நெருங்கிப் பழகியவர்களாகவும் மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தவர்களாகவும் இருந்துள்ளனர் என்று புறநானூறு கூறுகிறது. மக்களின் புறவாழ்விலும், அகவாழ்விலும் கலைஞர்கள் இடம்பெறும் இடத்தை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்" (தொல்.பு.இ.88:3-6)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. எண்ணிறந்த இசைக் கலைஞர்கள் இனக்குழு சமூகத்தில் இருந்துள்ளனர். இயவர், கூத்தர், துடியர், கொடியர், பறையர், திணையர் போன்றோர் வாழ்ந்துள்ளனர். சங்ககால நிகழ்த்துக் கலைஞர்கள் குடும்பமாக, குழுவாக, மிதவைச் சமூகமாக இயங்கியுள்ளனர். இவர்கள் பண்ணோடு பாடியும், இசைக்கருவிகளை இசைத்தும் ஆடல், கூத்து, நாடகம் நிகழ்த்தியும் தம் கலைத்திறனை வெளிப்படுத்தி மண்ணையும், மக்களையும் மகிழ்வுறச் செய்துள்ளனர். இவர்களைப் பாண்மரபு குழுவுக்குள் அடக்கலாம்.

சங்ககாலக் கலைஞர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று தங்களது கலைத்திறனை வெளிப்படுத்தி அவற்றின் மூலம் பெறும் பரிசிலைக் கொண்டு வாழ்க்கை நடத்தியுள்ளனர். அப்பரிசில்கள் பொன்னாகவோ, பொருளாகவோ, உணவாகவோ அமைந்திருந்தன. இவ்வாறு வாழ்ந்த இவர்கள் பரிசிலர், இரவலர் என்னும் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

கூத்தர், பாணர், விறலி போன்ற கலைஞர்கள் நாடோடிகளாகத் திரிந்தனர் என்பது பொதுவாகக் கூறப்படும் கருத்து. அவர்கள் வறுமையில் உழன்றார்கள் என்பதால்தான் புரவலர்களை நாடவேண்டியதாயிற்று என்பது மரபுச்செய்தி (Jeyaganesh, 2019). மறுபக்கம் தம்மை இரவலர்களாகக் குறித்துக் கொள்ளும் பாணர், புலவர், பொருநர் ஆகிய கலைஞரெல்லாம் மரியாதையுடைய மனதோடு வாழ்ந்திருக்கின்றனர்.

இரவலர் புரவலன் நீயுமில்லை. புரவலர் இரவலர்க்கு இல்லையுமல்லர் எனப்பெருஞ்சித்திரப் புலவன் மானமதுகையுடன் உரைப்பக் காணலாம் என்ற குறிப்பும் இடம்பெறுகின்றது (Balasubaramaniyan, 1998).

புறநானூற்றுச் செய்யுட்கள், அரசர் தம்மிடமிருக்கும் கலைஞர் பெருமக்களைத் தம் அரண்மைனையில் தங்க வைத்து, ஊனும் உணவும் நல்கினர் என்றும், குறிப்பிட்ட நாட்களுக்குப் பின் கலைஞர்கள் தம் ஊர்க்குச் செல்ல விரும்பி மன்னனிடம் வேண்டினர் என்றும் கூறியுள்ளன. எனவே,

கலைஞர்க்கும் ஊர்கள் உண்டென்பதையும், அதனால் அவர்கள் நாடோடிகள் இல்லை என்பதையும் உணர முடிகிறது.

## சங்க மக்களின் போர் வாழ்வு

சங்ககால அரசர்கள் போர்புரியும் பொழுது அறநெறியைக் கடைப்பிடித்துள்ளனர் என்பது பெருமைக்குரியது. போரிற்கு முன்பு பசுக்கூட்டம், பார்ப்பன மக்கள், பெண்கள், பிணியுடையோர், குழந்தைச் செல்வமற்றோர் போன்றோரைப் பாதுகாப்பான இடத்தில் விட்டப் பிறகே போரிட்டனர் என்பது,

"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்"

என்ற நெட்டிமையார் பாடல் மூலம் அறியப்படுகிறது (Swaminatha Iyer, 1956). போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடுதலைத் தாழ்ந்த செயலாக அக்கால மக்கள் கருதியுள்ளதை அக்கால மக்களின் மதிப்பை உணர்த்துகிறது.

"வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்

களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே" (Swaminatha Iyer, 1956).

## போர்க்களக் கடமை

ஒரு பெண் ஒரு தாயிடம் உன் மகன் எங்கே என வினவுகிறாள். அதற்கு அத்தாய் என்னுடைய மகன் எங்கே என்று தெரியவில்லை. புலி இருந்து சென்ற குகை போல வீரமகள் இருந்த வயிறு இங்குள்ளது. அவன் போர்க்களத்தில் காணப்படுவான் என வீரத்தோடு பதிலளிக்கிறாள்.

"புலி சேர்ந்து போகிய கல்லளை போல

ஈன்ற வயிறோ விதுவே

தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"

இதன்வழி சங்க இனக்குழு ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் வீரமிக்க மனதோடு இருந்துள்ளனர் என்பது பலப்படுகிறது (Swaminatha Iyer, 1956).

ஒரு மன்னன் தன் குடியில் தனக்கு பிறந்திருக்கும் மகனைக் காணச் செல்லும் பொழுது தனியே செல்லாமல், போர் உடை தரித்து போர்ப்படையோடு சென்று தன் மகனுக்கு குழந்தையிலேயே வீரத்தை ஊட்டும் பாங்கு புறநானூறு தமிழ்ச் சமூகத்தில் இருந்துள்ளதை

"கையது வேலே காலன புனைகழல்

மெய்யது வியரே மிடற்றது பசும்புண்

சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே"

என்ற அடிகள் மூலம் அறியலாம். சங்ககாலத்தைப் பொற்காலம் என்பர் (Swaminatha Iyer, 1956). இலக்கியவாதிகள். அக்கூற்று எள்ளளவும் பொய்யில்லை என்பது புறநானூறு வழி நமக்கும் புலனாகிறது.

## முடிவுரை

புறநானூற்றின் சில பாடல்களை வைத்தே அக்கால மக்களின் வாழ்வியல் முறைகளை நாம் அறிந்து கொள்ளலாம். மானுட வாழ்க்கைச் செவ்வனே அமைவதற்கு மனிதநேயப் பண்பே அடிப்படை

என்பதைக் கண்டுணர்ந்த பழந்தமிழ் சமூகம் சிறப்பானதொரு கூட்டு வாழ்க்கையை வாழ்ந்துள்ளது. சங்க இலக்கியப் பாடல்களில் ஈகை செய்தல், பிற உயிர்களின் துன்பம் கண்டு இரங்குதல், நட்பு நிலையில் நிலை கொள்ளுதல் போன்ற மனிதநேயப் பண்புகள் நிறைவாக இடம்பெற்றுள்ளதை இக்கட்டுரை உணர்த்தி நிற்கிறது.

## References


Balasubaramaniyan, K.V. (1998) Sanga Ilakiyathil Kalaium Kalai Kotpadum, International Institute of Tamil Studies, Chennai, India

Jeyaganesh, A. (2019) Nikalkali Nokkil Purananutru Panuvalkal Oor Aivu, Doctoral Dissertation, Pondicherry University, Pondicherry, India

Nithya Kalyani, (2012) R Eari Katturai Thogupu, R Anaithinthiya Araichi Kazhagam, Mohanur, India

Swaminatha Iyer, U.V. (1956) Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa Noolagam, Chennai, India

Velammal, (2013) Tamil Ilakkiyangalil Panmuga Alumai, Semmuthai Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License